பக்கங்கள் நான்கு

# வலம்புரி
VALAMPURI

விலை ரூபா 5-00

சங்கு: 1 வள்ளுவர் ஆண்டு 2031 வைகாசி 12 வியாழக்கிழமை (25 - 05 - 2000) VALAMPURI ஒலி: 157

# ★ இலங்கையின் இனப்பிரச்சினைக்கான சமாதான முயற்சியில் நோர்வேக்கு இந்தியா பங்களிப்புசெய்யவேண்டும்!

## ஜனாதிபதி இந்துபத்திரிகைக்கு பேட்டி

**இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக சமாதான முயற்சியில் ஈடுபட்டிருக்கும் நோர்வேயின் கரங்களைப் பலப்படுத்துவதன் மூலம் இலங்கையின் சமாதான முயற்சிக்கு இந்தியா பங்களிப்பு செய்யமுடியும்,**

**விடுதலைப்புலிகளை பேச்சுக்கு வரச்செய்வதில் இந்தியா தனது செல்வாக்கை செலுத்தவேண்டும். என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறியுள்ளார்.**

இந்தியாவில் இருந்து வெளிவரும் ''இந்து'' பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றிலேயே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா மேற்கண்டவாறு கூறியுள்ளார்

ஜனாதிபதி அந்த பேட்டியில் மேலும் கூறியிருப்பதா

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஊரடங்கு அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ், பிரதேச செயலர் பிரிவில் அமுல் படுத்தப்பட்டிருக்கும் ஊரடங்குச் சட்டம் இன்று காலை 9.00 மணியிலிருந்து நண்பகல் 12.30 மணி வரை தளர்த்தப்பட்டிருக்கும்.

யாழ். பிரதேச செயலர் பிரிவு தவிர்ந்த யாழ் குடா நாட்டின் தீவுப்பகுதி உட்பட ஏனைய பகுதிகளில் இன்று அதிகாலை 5மணிக்குஊரடங்கு தளர்த்தப்பட்டுமீண்டும் இன்று இரவு ஏழு மணிக்கு அமுல் படுத்தப்படும் என்று யாழ். பாதுகாப்பு நடவடிக்கைத்தலைமைச் செயலகம் அறிவித்துள்ளது. [க-வ]

## 'தனித் தமிழீழக்' கோரிக்கை ஏற்க முடியாது அத்வானி தெரிவிப்பு

[புதுடில்லி]

''இலங்கைத் தமிழர்களுக்குத் தனித் தமிழீழம் என்ற கோரிக்கை ஏற்கப்பட முடியாதது'' அதேவேளை இலங்கையில் உள்ள இந்திய வம்சாவளித் தமிழர்களின் நலன் பாதுகாக்கப்பட்டாக வேண்டும்.

இவ்வாறு இந்திய உள்துறை அமைச்சர் எல்.கே. அத்வானி சிம்லாவில் செய்தியாளர்களிடம்பேசுகையில் கடந்த செவ்வாய்க்கிழமை தெரிவித்தார்

இலங்கைக்கு இந்திய இராணுவத்தை அனுப்புதல் என்ற பேச்சுக்கே இடம் இல்லை என்றும் அவர் கூறினார். [வ-ச]

## இலங்கைக்கு இராணுவ உதவி இந்தியா வழங்கமாட்டாது

### இணை அமைச்சர் அஜித்குமார்பாஞ்சா

(இலண்டன்)

இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்திலிருந்து எழும் சூழ் நிலைகள் கட்டு மீறிப் போவதை இந்தியா ஒரு போதும் அனுமதிக்கமாட்டாது என இந்தியவெளியுறவு இணை அமைச்சர் அஜித் குமார் பாஞ்சா தெரிவித்துள்ளார்.

இலண்டனில் நேற்று முன்தினம் பத்திரிகையாளர் மத்தியில் பேசுகையில்மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சரைத் தாம் சந்தித்த போது இலங்கை நிலைவரம் குறித்து விவாதிக்கப்பட்ட

(4ஆம் பக்கம் பார்க்க)

## விமானப்படை ஹெலி சரசாலையில் விபத்து

[கொழும்பு]

இலங்கை விமானப்படையைச் சேர்ந்த ஹெலி கொப்டர் ஒன்று நேற்று மாலை சரசாலை மேற்குப் பகுதியில் தரையிறங்க முற்பட்டபோது விபத்துக்குள்ளானதாக விசேட ஊடகத்தகவல் நிலையம் தெரிவித்துள்ளது.

(4ஆம் பக்கம் பார்க்க)

## வவுணதீவு படைமுகாம்கள் மீது புலிகள் ஷெல் தாக்கு, சிப்பாய் பலி

[கொழும்பு]

யாழ்ப்பாணத்தில் கடும் சண்டை தொடர்ந்து கொண்டிருக்கும் இவ்வேளையில் மட்டக்களப்பு மாவட்ட வவுணதீவு இராணுவ முகாம் மீதும், விமானப் படைத் தளம் மீதும் விடுதலைப்புலிகள் மோட்டார் ஷெல் தாக்குதலை மேற்கொண்டதில் ஒருஇராணுவச்சிப்பாய் கொல்லப்பட்டுள்ளார்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி யுத்தத்திற்கு நிதி உதவி கோருகிறார்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடன் சண்டையிடுவதற்காக போர் நிதியத்திற்கு நிதி வழங்குமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா நாட்டின் பொதுமக்களையும், அரசாங்க உத்தியோகத்தர்களையும், தனியார் கம்பனி ஊழியர்களையும் இருநாள் சம்பளத்தை வழங்குமாறு கேட்டுள்ளார்,

(4ஆம் பக்கம் பார்க்க)

## சரசாலை மேற்கில் மோதல்

சரசாலை மேற்குப் பகுதியில் நேற்று மாலை அரசுப் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் மோதல்கள் புதிதாக வெடித்துள்ளதாக விசேட தகவல் நிலையம் தெரிவித்துள்ளது. (ச)

## ★ இலங்கைப் பிரச்சினைகுறித்து இந்திய வெளியுறவுச் செயலரும் நோர்வே பிரதிநிதியும் பேச்சு

(புதுடில்லி)

இலங்கை வந்த நோர்வே வெளிவிவகார பிரதி அமைச்சருடன் வருகைதந்திருந்த இலங்கை விவகாரம்தொடர்பாக நோர்வே அரசினால் நியமிக்கப்பட்டுள்ள எரிக்

(4ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வே தூதரகம் மீது கைக்குண்டு வீச்சு

(கொழும்பு)

கொழும்பிலுள்ள நோர்வே தூதரகம் அருகே நேற்று கைக்குண்டு ஒன்று வீசப்பட்டதாகவும் இதனால் உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை என்றும் ஏஜென்சி செய்தியை ஆதாரம் காட்டி பி.பி.ஸி. நேற்றிரவு தெரிவித்தது. (ச)

## அரசியலமைப்பு திருத்தம் குறித்து ஜனாதிபதி தமிழ்க்கட்சிகள் பேச்சு

(கொழும்பு)

உத்தேச அரசியல் அமைப்பு சம்பந்தமாக ஆராய்வதற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தமிழ்க் கட்சிகளை அழைத்து பேசவுள்ளார்.

அலரிமாளிகையில் நடைபெறவுள்ள இச்சந்திப்பு இன்று நடைபெறவுள்ளது.

அரசியல் அமைப்பு மாற்றம் குறித்து ஆராய்வதற்காக நடைபெறவுள்ள இச்சந்திப்பில் கலந்து கொள்ளுமாறு தமிழர்விடுதலைக் கூட்

[4ஆம் பக்கம் பார்க்க]

## கோண்டாவில் களஞ்சியத்திற்கு வரவும்

[யாழ்ப்பாணம்]

''சஜிந்த'' ''இந்துறுவலி'' ஆகிய இரு கப்பல்களிலும் பொருட்களைத் தருவித்த வர்த்தகர்கள் இன்று கோண்டாவில் களஞ்சியத்திற்கு வருகை தருமாறு யாழ். செய

(4ஆம் பக்கம் பார்க்க[

## எமது வாடிக்கையாளர்கள் கவனத்திற்கு

**வீ. எஸ். பி. குறூப்**
**மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்,**
**ஜெசிபா ஏஜென்சி**
**132, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**

மேற்படி முகவரியில் இயங்கி வந்த நிறுவனங்கள் வாடிக்கையாளர் நன்மை கருதி

**மானிப்பாயில் உள்ள தினேஸ் பேக்கரி**

கட்டடத்தில் [சந்தை அருகில்] இயங்கி வருகின்றது என்பதை அறியத்தருகின்றோம். மற்றும்

**றேயல் வைன் சொப், நியூபரடைஸ்**

நிறுவனங்களுக்கும் தொடர்பு கொள்ளலாம்.

வீ. எஸ். பி. குறூப்
ஜெசிபா ஏஜென்சி
நிர்வாகத்தினர்.

[கி/335]

## அறிவித்தல்

தச்சன்தோப்பு கைதடியைச் சேர்ந்த கு.காசிப்பிள்ளை என்பவருக்கு அவரது குடும்பத்தினர் அனைவரும் இல.85, பத்திராளிகோயிலடி, வண்ணார் பண்ணை மேற்கில் இருக்கின்றனர் என்பதை அறியத்தருகின்றனர்.

தகவல்: குடும்பத்தினர்

(457)

## இடம் மாற்றம்

200/ ஆஸ்பத்திரிவீதியில் இயங்கி வந்த மாஸ்டர் ஸ்கேல் சேவிஸ்சும் 266/1ஸ்ரான்லி வீதியில் இயங்கி வந்த இரத்தினா மோட்டோசும் தற்பொழுது இரத்தினம் அவனியூ கொக்குவில் மேற்கு கொக்குவிலில் இயங்கி வருகின்றதுஎன்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகிறோம்.

நிர்வாகத்தினர்

(459)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவன்
**செல்வன் பூ. அபிமன்**
அவர்களின் அன்புத் தாயார்
**பரமேஸ்வரி பூபாலசிங்கம்**

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

விஞ்ஞானபீட மாணவர்கள்,
4 ஆம் வருடம்,
யாழ். பல்கலைக்கழகம்.

[466]

## பொருட்கள் களவு

(அச்சுவேலி)

யாழ். மாநகரசபையின் சுகாதாரப் பிரிவினரால் நடாத்தப்பட்டு வரும் கந்தர் மடம் ஆரம்ப சுகாதார கவனிப்பு நிலையம் கடந்த வாரம் ஊரடங்கு வேளையில் திருடர்களினால் உடைக்கப்பட்டு அங்கிருந்த பெறுமதியான பொருட்கள் சூறையாடப்பட்டுள்ளன.

இந்த நிலையத்திலிருந்து குழந்தைகளிற்கான பால்மா வகைகள் மருந்துப் பொருட்கள் அடங்கலாக பல ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் சூறையாடப்பட்டுள்ளன. (உ-14)

## அடையாள அட்டைகள் கண்டெடுப்பு

தேசியஅடையாள அட்டையும் விசேட அடையாள அட்டையும் யாழ்ப்பாணப் பகுதியில் கண்டெடுக்கப்பட்டு 'வலம்புரி' அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ள .

உரியவர் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும். (க)

**கண்டெடுக்கப்பட்டது**

இல. 10, தொடர்மாடி, குருநகரைச் சேர்ந்த அன்ரனி யசோதா என்பவரின்தேசிய, விசேட அடையாள அட்டைகள்கண்டெடுக்கப்பட்டுவலம்புரி அலுவலகத்தில்ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும். [ந]

## யாழ். பல்கலைக் கழகம் யாழ்ப்பாணம்

**கலந்துரையாடல்**

யாழ். பல்கலைக்கழக சகல கல்விசாரா ஊழியர்களையும் இன்று (2000-05-25) காலை 11-00 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் உபவேந்தர் சந்தித்து கலந்துரையாட விரும்புகிறார்.

தவறாது சமூகம் தரவும்.

-உப வேந்தர்

(கி/338)

## வங்கி அறிவித்தல்

**இன்று முதல் மறு அறிவித்தல்வரை யாழ். மாநகர எல்லைக்குள் இயங்கும்**

இலங்கை வங்கி, மக்கள் வங்கி, ஹற்றன் நாஷனல் வங்கி, வர்த்தக வங்கி, மற்றும் தேசிய சேமிப்பு வங்கி ஆகியவற்றின் சகல கிளைகளும் வாடிக்கையாளர்களுக்காக காலை 9-00 மணிமுதல் முற்பகல் 10-30 மணிவரை திறந்திருக்கும்.

மேற்படி கிளைகள் தவிர்ந்த ஏனைய கிளைகள் காலை 9-00 மணி முதல் நண்பகல் 12-00 மணி வரை திறந்திருக்கும்

மறு அறிவித்தல்வரை சாவகச்சேரி வங்கிக்கிளைகள் மூடப்பட்டிருக்கும்,

ஊரடங்கு சட்ட நேரத்திற்கமைய மேற்படி நேரங்களில் மாற்றங்கள் கொண்டுவரப்படலாம்.

**தலைவர்.**
யாழ், மாவட்ட வங்கியாளர் சங்கம்.

(சி 341)

## அறிவித்தல்

மட்டுவில் வடக்கு பூ.வேலுப்பிள்ளை (மதுவரி) குடும்பத்துடன் சுன்னாகத்தில் இருக்கின்றார். பூ.கந்தையா,சங்கரப்பிள்ளை,ஆறுமுகம் நாகலிங்கம் குடும்பத்தினரின் விபரம் அறியவிரும்புகிறார்.

பூ.வேலுப்பிள்ளை
60/4டாக்டர் சுப்பிரமணியம்வீதி
சுன்னாகம்

(456)

## 19 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**கலாநிதி ஆ. தியாகராசா MA. M. LITT**
(முன்னாள் தேசியப் பேரவை உறுப்பினர், முன்னாள் அதிபர் கலாநிதி ஆ, தியாகராசா மகாவித்தியாலயம் காரைநகர்)

பிறப்பு: 17-04-1916



இறப்பு: 25- 05 - 1981

ஊர்மறந்தது உற்றார்மறந்தனர் உலகமும்மறந்தது கல்விகற்றோருப்மறந்தனர் கற்பித்தபாடசாலையும் மறந்தது உம்மால் உருவானோர் இன்றுலகில் உன்னதமாக வாழ்கின்றனர் இன்றையதம்நிலைக்கு எவர்காரணமென்று நினைக்கவே மறந்தனர் நன்றி மறவாத செந்தமிழன் நான் என்றும் உங்களை மறவேன்

'தவபவனம்'
பொன்னம்பலம் வீதி
காரைநகர்

உங்களது மாணவன்
சி. சிவபாதம்
வங்கியாளர்

(448)

### அறிவித்தல்

# இ. ச. பேரம்பலம் சக நிறுவனம்

**50, 52, 54, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

# கஜமுகன் ஹாட்வெயர்

**147, 149, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**

மேற்படி இரு ஸ்தாபனங்களும் மாவடி, வட்டுக்கோட்டை (அடைக்கலம் தோட்டம் கந்தசுவாமி கோயிலுக்கருகாமை) என்ற முகவரியில் தற்காலிகமாக இன்று முதல் இயங்குகின்றது என்பதை வாடிக்கையாளர், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

இங்ஙனம்
நிர்வாகம்.

(சி- 339)

குற்றம் இலனாய்க் குடி செய்து வாழ்வானைச் சுற்றமாச் சுற்றும்உலகு.
- குறள்

# வலம்புரி

## சிரங்கு முற்றி

இந்த மண்ணின் அவலங்களுக்கெல்லாம் அலட்சியப் போக்கே காரணமாகும். அலட்சியப் போக்கு இலட்சிய வேட்கை முன் பொசிங்கித்தானே போகும். புரையோடிப்போன இனப் பிரச்சினை இன்று ஐக்கிய நாடுகள் சபைக்கே எடுக்க வேண்டுமென்றஅளவிற்கு முற்றி விட்டது. சர்வதேச சமூகம்விழித்துக்கொண்டு விட்டது.

குடத்துள் எரிந்த விளக்கு இன்று குன்றில் எரிகின்ற அளவுக்கு வந்து விட்டது. தமிழரின் இன்றைய அவலநிலையை, அவன் தலை விதியை நினைக்க துக்கம் தாழாது அலைக்கிறது தான்; ஆனால்இத்தகையதொரு பேரிடிக்கும் பெரும் துன்பத்திற்குப் பின் மலரப் போவது மகிழ்ச்சியே என்பது உறுதி. இதுவள்ளுவன் கண்ட வாழ்வியல். அன்றியும் தமிழர்கள் கொடுத்த விலை நாலுலகும் அறிந்ததொன்றே.

உலகமே விழித்துக் கொண்ட வேளை-சம்பந்தப் பட்டோர் தூங்கமுடியாது. இல்லை தூங்குபவன் போல் நடிக்கவும்முடியாது. உலகம் நாடக மேடை என்பது செகப்பிரியன்நோக்கு. நிணச்சேறால்மலிந்த மண்ணில்நிம்மதி ஒன்று வேண்டும். முடிவிடத்தை நாடி ஓட்டப் பந்தயத்தில் ஈடுபட்டோர் ஓடவேண்டும்.

சின்னப் பிள்ளைக்கு விளையாட்டு சுண்டெலிக்குச் சீவன் போகுது என்ற நாடோடிப்பழமொழி போல் இதமான மின்விசிறிக்குக் கீழ் இருப்போர்க்கும், குளிரூட்டிய அறையில் சுகங்காணு வோர்க்கும். மனிதவெள்ளம்படும் வேதனை இனி மேலும் புரியாமல் இருக்கக் கூடாது.

இன்ரனெற் வந்தென்ன ஈமெயில் வந்தென்ன தியாக உணர்வு தேய்ந்து போய்விட்டதே. கன்றிய மனங்கள் களிப்படைய இறுதிஓட்டமே இதுஎன்று எண்ணத்தோன்றுகிறது. இனிப்பட முடியாது இன்னல் என்ற அளவிற்கு இதயம் நெகிழ்ந்து விட்டது.

ஓடிஓடி ஓடாய்ப்போன தமிழன் நாடுவதுநிம்மதிப் பெருமூச்சே. பிறப்புரிமையான சுதந்திரத்தைப் பேணி வாழத் தலைப்படுவதில் பிழை ஒன்றுமில்லையே பிழை எங்கே என்றால் அதனைப்பெறுவதற்கு தடையாக நந்தியாக விருப்பது தான்.

- அன்புடன் ஆசிரியர்

## இந்திய தேசிய லீக் ஆதரவு

[சென்னை]

இலங்கை இனப்பிரச்சினையில் மத்திய அரசு எடுத்திருக்கும் நிலையை ஆதரிப்பதாக இந்திய தேசிய லீக்கின் தமிழ் நாட்டுப் பிரிவு முடிவு செய்துள்ளது.

மதுரையில் நடை பெற்ற கட்சியின் செயற்குழுக் கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது. [வ]

# அரசு, விடுதலைப் புலிகள், ஐ. தே. க பேச்சை ஆரம்பிக்க வேண்டும்!

[கொழும்பு]

''மக்களினதும் சொத்துக்களினதும் அழிவைத் தவிர்ப்பதற்கு அரசாங்கம் எதிர்க்கட்சி விடுதலைப் புலிகள் இயக்கம் ஆகியன பொறுப்புணர்ச்சியுடன் நடந்து யுத்தத்தை நிறுத்தி உடன் பேச்சு வார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டும்.

இவ்வாறு நீதிக்கும் சமாதானத்திற்கும் நல்லெண்ணத்துக்குமான தேசிய இயக்கம் உருக்கமான வேண்டுகோள் ஒன்றினை விடுத்துள்ளது.

இவ்வியக்கத்தின் தலைவரும் செயலாளரும் கையெழுத்திட்டு வெளியிட்டுள்ள பகிரங்க வேண்டுகோளில் மேலும் தெரிவிக்கப்பட்டுளளதாவது;

''தற்போது எதிர்நோக்கப்படும் நெருக்கடி நிலையிலிருந்து எங்கள் மக்களைக் காப்பாற்றுவது உலகின் பெரும் மதங்களைச் சார்ந்த எங்கள் தலையாயக் கடமையாகும். முதலில் அண்மைய இராணுவப் போரின் போது உயிரிழந்த அனைவரிற்குமாக நாம் ஆழ்ந்த கவலையடைவதுடன் அவர்களது பெற்றோர், உறவினர்கள் நண்பர்களுக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த யுத்தம் மக்கள் நெருக்கமாக வாழும் யாழ். குடா நாட்டுக்குள் விஸ்தரிக்கப்பட்டுள்ளதால் பல்லாயிரக்கணக்கான மக்களின் உயிர் பறிபோவதுடன் தனியார் மற்றும் பொதுச் சொத்துக்கள் அழிந்து போகும்.

எனவே இந்த அர்த்தமற்ற அழிவையும் இரத்தக்களரியையும் உடனடியாகத் தவிர்க்கும் வகையில் அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் பொறுப்புணர்ச்சியுடன் நடந்து கொள்ள வேண்டும் என வலியுறுத்துகிறோம்.

## யாழ். வைத்தியசாலை நலன் கருதி பஸ்சேவை ஆரம்பமாகியுள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனாவைத்தியசாலை ஊழியரின் நன்மை கருதி பஸ்சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கோண்டாவில் டிப்போவில் ஆரம்பமாகி இச்சேவை உரும்பிராய் ஊடாக மருதனார் மடம், உடுவில், மானிப்பாய், சண்டிலிப்பாய், சங்கானை, சித்தங்கேணி, ழிபுரம், மூளாய், சங்கரத்தை, நவாலி ஆனைக்கோட்டை ஊடாக யாழ். போதனா வைத்தியசாலையைஅடையும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே போன்று வடமராட்சி ஊழியரின் நன்மைகருதியும் பஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இச்சேவை பருத்தித்துறையில் இருந்து புறப்பட்டு புலோலி, அச்சுவேலி, கோப்பாய்சந்தி உரும்பிராய் ஊடாகபலாலிவீதி அடைந்து வைத்தியசாலை சென்றடையும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

(சி-12)

## நாளை கொடியேற்றம்

(யாழ்ப்பாணம்)

சரித்திரப் பிரசித்தி பெற்ற இணுவில் பரராசசேகரப் பிள்ளையார் கோவில் வருடாந்த உற்சவம் நாளை வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. (உ)

## காங்கேசன் தடுப்பு முகாமிலிருந்து 9 கைதிகள் யாழ். சிறையில் ஒப்படைப்பு

பயங்கரவாத தடைச்சட்டதின் கீழ் கைது செய்யப்பட்டு காங்கேசன்துறை பயங்கரவாதத் தடைமுகாமில் தடுத்துவைக்கப்பட்டிருந்த 9 கைதிகளைப் பொலிஸார் யாழ். சிறைச்சாலையில் ஒப்படைத்துள்ளனர்.

மல்லாகம் நீதிமன்ற பிரிவைச் சேர்ந்த 7 பேரும் ஊர்காவற்றுறை நீதிமன்றப் பிரிவைச் சேர்ந்த ஒருவரும் யாழ் நீதி மன்றப் பிரிவைச் சேர்ந்த ஒருவரும் இதில் அடங்குவர்.

அரியகுட்டி நாகராசா, நவரெட்ணம் ஜீவதாஸ், கதிரவேல் சாந்தகுமார், செல்வராசா துஸ்யந்தன், தவசி தவரூபன், இன்னாசி மனோகரன், சின்னத்தம்பி ஜீவநேசன், சரவணன் கொல்டர், சிமியோன் அன்ரன் ஆகிய கைதிகளே பொலிஸாரினால் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ச-52)

## யாழ். குடாநாடு வழமைக்குத் திரும்பும் காலம் வெகு தூரத்தில் இல்லை

### வலி.மேற்கு பிரதேசசபைத்தலைவர் தெரிவிப்பு

[யாழ்ப்பாணம்]

தற்போதைய யுத்த அவலங்கள் நீங்கி யாழ். குடாநாடு மீண்டும் பழைய நிலைக்கு திரும்பும் காலம் வெகு தூரத்தில் இல்லை என வலி மேற்கு பிரதேச சபைத் தலைவர்ந. திரிலோகநாதன் தெரிவித்துள்ளார்.

எஸ். மகாலிங்கம் தலைமையில் இடம்பெற்ற நன்றி தெரிவிப்புக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: தற்போதைய சூழ்நிலையில் வதந்திகளுக்கு செவிமடுக்காமல் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். மக்களை துன்பநிலைக்கு உள்ளாக்கும் எச் செயலிலும் எவரும் ஈடுபடக் கூடாது.

திருத்தப்படாமல் இருந்த பண்ணை வீதி திருத்தப்பட்டு மக்கள் பாவனைக்கு விடப்பட்டதற்கு வலி.மேற்கு பிரதேச சபைத்தலைவருக்கும் நன்றி தெரிவிக்கும் முகமாகவே மேற்படி கூட்டம் நடைபெற்றது இங்கு குறிப்பிடத்தக்கது. [க]

## தீவக அரச வங்கிகளில் ஒருமணி நேரமே சேவை நிகழ்கிறது

[ஊர்காவற்றுறை]

தீவகத்தில் உள்ள அரச வங்கிகள் ஒருமணி நேரமே சேவை நடத்துவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முற்பகல் 10மணி முதல் 11 மணிவரையுமே இச்சேவை வழங்கப்படுவதாகவும் இதனை வாடிக்கையாளர்கள் ஊர்காவற்றுறை மக்கள் வங்கி மற்றும் இலங்கைவங்கிக் கிளைகளில் வரிசையில் நின்று இச்சேவையைப் பெறுவதுடன் சேவையைப் பெறமுடியாமல் திரும்பிப் போவதையும் காணக்கூடியதாகவுள்ளது.

[ச-75]

## தமிழகம் வரும் இலங்கை அகதிகளை இந்தியா தொடர்ந்து வரவேற்கும்

### அதிகாரிகள் தெரிவிப்பு

இலங்கையில் தொடரும் யுத்த நிலையை அடுத்துதமிழகம் வரும் இலங்கை தமிழ் அகதிகளைத் இந்தியா தொடர்ந்து வரவேற்கும் என இந்திய அதிகாரிகள் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் பிரதிநிதிகளிடம் உறுதிபட தெரிவித்துள்ளதாக பி.ரி.ஐ தெரிவித்தது.

யாழ்ப்பாணத்தின் தற்போதையநிலையில் பெருமளவு அகதிகள்மிழதகம்விரைவதையடுத்தே மேற்படி அரச அறிவித்தல் இந்தியா தரப்பிலிருந்து விடுக்கப்பட்டதாக புதுடில்லி தகவல்கள் தெரிவித்தன. (க)


## தவறிவிட்ட ஆவணங்கள்

யா / குட்டியப்புலம் அ. த. க. பாடசாலை அதிபரின் முக்கிய ஆவணங்கள் அடங்கிய கம்பஸ் பாக் [Bag] சுன்னாகம் சந்திக்கும் இலங்கை வங்கிக்குமிடையில் தவறிவிட்டது.

கண்டெடுத்தோர் வலிகாமம் வலயக்கல்வி காரியாலயத்தில் அல்லது சுன்னாகம் துர்க்கா ஸ்ரேஷனேர்ஸ் ஸ்தாபனத்தில் ஒப்படைத்து உதவவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

- அதிபர்.

யா / குட்டியப்புலம் அ. த. க. பாடசாலை

[343]

## அறிவித்தல்

154 ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணத்தில் இயங்கிவந்த

*S.V.M.*

ஸ்தாபனம் தற்காலிகமாக மக்கள் நலன் கருதி சண்டிலிப்பாயில் உள்ள சசி மில்லில் இயங்குகிறது என்பதை சகல வாடிக்கையாளர்கட்கும் தெரிவித்துக்கொள்கின்றோம்

நிர்வாகம்

(464)

*ENGLISH*

**SPOKEN and GRAMMAR**

*BY BRITTO*

கொக்குவிலில் நடைபெற்று வந்த ஆங்கில வகுப்புக்கள் யாவும் சனி, ஞாயிறு உட்பட திங்கள் (29-05-2k) அன்று பழைய நேர அட்டவணைப்படி நடை பெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

(462)

## இடம் மாற்றம்

### வினோ நகைப் பூங்கா

185, கஸ்தூரியார் வீதியில் இயங்கிவந்த எமது ஸ்தாபனம் தற்காலிகமாக கீழ்க்காணும் முகவரியில் இயங்கி வருகின்றது என்பதை அறியத்தருகின்றோம்,

**ச. புவிச்சந்திரன்**
172|3, பிறவுண் வீதி
யாழ்ப்பாணம்.

உரிமையாளர்,

(467)

# கைதடி வயோதிபர் இல்லத்தில்

# 'ஷெல்'வீச்சு 7பேர்பலி·17பேர்காயம்

(யாழ்ப்பாணம்)

கைதடி வயோதிபர் இல்லத்தில் வீழ்ந்து வெடித்த ஷெல்லினால்வயோதிபர் இல்லத்தில் இருந்த ஏழு பேர் கொல்லப்பட்டும் பதினேழு பேர்காயமடைந்துமுள்ளனர்.

கொல்லப்பட்டோர் விபரம்:

கணேசராஜா சிறி பூதப்பிள்ளை பாறுப்பிள்ளை ராசன் சிவசுப்பிரமணியம் செல்லையா நல்லதம்பி, தர்மலிங்கம் முத்தையா செல்வி மீனம்மா முருகையா லீலாவதி பாறுப்பிள்ளை, செல்லப்பா மகேசன்

படுகாயமடைந்தோர் விபரம் வருமாறு:

நடராசா அன்னலட்சுமி [60], பொன்னம்பலம் ஞானம்மா (75], செல்வநாயகம் கனகமணி [72], வைத்திலிங்கம் திருச்செல்வம்[68], சிவராமன் சிவசுந்தரி [57), வேலுப்பிள்ளை முத்தையா [86]. கந்தையா கணேசராஜ் (74), நாகமுத்து சுப்பிரமணியம் [67), செல்லையா மார்க்கண்டு(50), வல்லிபுரம் தர்மலிங்கம் [65), ராசரட்ணம் புண்ணியநாதன்[83], ஐயம்பிள்ளை வாமதேவன் (65), முத்துராசாமுத்தப்பா [70], வைரவர் கந்தன்[68], செல்லையா பொன்னம்பலம் (56), கந்தையா நாகலிங்கம் [80], வைத்திலிங்கம் விஸ்நாதன்[73] [வ வி]

## பலாலி ஆசிரியர் கலாசாலை விரிவுரைகள் மீண்டும் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

பலாலி ஆசிரிய கலாசாலை விரிவுரைகள எதிர்வரும் திங்கட்கிழமை 29ஆம்திகதிமுதல் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதன் பிரகாரம் சகல விரிவுரையாளர்களையும், ஆசிரிய பயிலுநர்களையும் கலாசாலைக்குச் சமூகம் தருமாறு கலாசாலை நிர்வாகம் கேட்டுள்ளது. (ந-4)

### வவுணதீவு...

இத் தகவலை பாதுகாப்பு அமைச்சு தெரிவித்ததாக பி. பி. ஸி தெரிவித்துள்ளது.

படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குமிடையில் உள்ள இரு முகாம் மீதுமே ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் படையினர் புலிகளின் பகுதிகள் நோக்கி பதில் தாக்குதல் மேற்கொண்டதாகவும் அது மேலும் தெரிவித்தது. (வ-ச)

### கோண்டாவில்...

லக திட்டப்பணிப்பாளர் எஸ். மகாலிங்கம் கேட்டுக் கொண்டுள்ளார்.

தனியார் வர்த்தகர்களினால் இக்கப்பல் மூலம் எடுத்துவரப்பட்ட பொருட்களை இறக்குவது தொடர்பாக ஆராய்வதற்கு இவர்களை திட்டப்பணிப்பாளர் அழைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (வ)

### இலங்கைக்கு...

தாகவும் தெரிவித்தார்.

இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் இராணுவத் தலையீடு எதுவும் இருக்காதெனவும் அவர் உறுதிபடத் தெரிவித்துள்ளார். (வ-க)

### சமாதான...

தாவது,

நோர்வேயுடன் இணைந்து ஏனைய சில நாடுகளும் கூட்டாக மேற்கொள்ளும் இராஜதந்திர முயற்சிகளில் இந்தியாவையும் பங்குபற்றச் செய்வதற்குஅரசாங்கம்ஆராய்ந்து வருகின்றது.

இலங்கை விவகாரததில் இராணுவ ரீதியாக தலையிட இந்தியா தயக்கம்காட்டுகிறது, முன்னைய ஐக்கிய தேசியக்கட்சி அரசு இந்தியாவை நடத்திய விதமே இதற்குக்காரணமாகும்.

யுத்த முனையில் போர் தந்திரோபாய முறையில் சில தவறுகள் நடைபெற்றுள்ளது.

தற்பொழுது வெளிநாடுகளில் இருந்து ஆயுதங்கள் கிடைத்திருப்பதனால் யாழ்ப்பாணத்தை இராணுவம் தக்கவைத்துக் கொள்ளமுடியும் என்றும் யாழ்ப்பாணம் புலிகளின்கைகளில்சிக்குவதை அனுமதிக்கமுடியாது என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து இராணுவத்தை வாபஸ் பெறவேண்டுமென்று புலிகள் கூறுவது கேலிக்கூத்தான விடயாகும். சுயமரியாதை உடைய எந்த ஒரு அரசும் இதனை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் இராணுவத்தினரை வாபஸ் பெறுவதற்கு இப்போது எந்தச் சந்தர்ப்பமும் இல்லை என்றும் கூறிய ஜனாதிபதி இராணுவத்தினரின் மன நிலையைப் பாதிப்படையச் செய்பவர்கள் யாராக இருந்தாலும் இனமோதல்களை உருவாக்கு பவர்கள் யாராக இருந்தாலும் அவர்களின் செயல்பாட்டை தடுத்து நிறுத்தஅரசு முயற்சிஎடுக்கும்.

தற்போது தடை செய்யப்பட்ட இரண்டு பத்திரிகைகளும் முழுக்க முழுக்க துரோகமான முறையில் செயல்பட்டு வந்துள்ளன. இவற்றுக்கு பல தடவைகள் எச்சரிக்கை விடுக்கப்பட்டு வந்தன அதனையும் அவை மீறியதினாலேயே மூடவேண்டியசூழ் நிலை ஏற்பட்டது என்றும் கூறியுள்ளார். (வ)

### விமானப்படை...

ஹெலிகொப்டர் தீப் பற்றிக்கொண்டதில் அதில் சென்ற இரு படை வீரர்கள் கொல்லப்பட்டார்கள் என்று ஊடகத்தகவல் நிலையம் மேலும் தெரிவித்துள்ளது; (வ-ச)

### ஜனாதிபதி...

ஆடம்பரச் செலவுகளை விடுத்து அதனை தேசிய பாதுகாப்பு நிதிக்கு வழங்குமாறும் ஜனாதிபதி கோரியுள்ளார்.

# போதியளவு ம. எண்ணெய் கையிருப்பில் ப. நோ. கூ.சங்கங்கள் மூலம் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் தற்போது நிலவும் மண்ணெண்ணை தட்டுப்பாட்டை போக்க யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன் யாழ். கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளருடன்,இணைந்து நடவடிக்கை எடுத்துள்ளார்.

வடபிராந்திய பெற்றோலிய கூட்டுத்தாபனத்தால் வழங்கப்படும் மண்ணெண்ணையை யாழ். மாவட்டத்தில் உள்ள பல நோக்குக் கூட்டுறவுச்சங்கங்கள் மூலமாக பங்கீட்டு அட்டைக்கு விநியோகம் செய்வதென நேற்று நடைபெற்ற கூட்டத்தில் முடிவெடுக்கப் பட்டது;

இதனை அடுத்துவரும் காலத்தில் கூட்டுறவுச்சங்கங்களுக்கு மட்டுமே மண்ணெண்ணையை வழங்கி அவர்கள் மூலம் பாவனையாளர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

இதேவேளை காங்கேசன்துறையில் உள்ள மண்ணெண்ணை களஞ்சியத்தில் சுமார் மூன்று லட்சம் லீற்றர் மண்ணெண்ணை கையிருப்பில் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (வ)

### அரசியலமைப்பு...

டணி, புளொட், ஈ.பி.டி.பி. ரெலோ ஆகிய கட்சிகளுக்கு ஜனாதிபதி செயலாளருக்கும் அழைப்பு விடுத்துள்ளது.

அரசியல் அமைப்பு மாற்றம் சம்மந்தமாக கடந்த சில மாதங்களாக ஐக்கிய தேசியக்கட்சியுடன் பேச்சு நடத்திய அரசு ஐக்கியதேசிய கட்சியுடன் இணக்கம் கண்ட விடயங்கள் குறித்து தமிழ்க் கட்சிகளுடன் ஆராய்வதற்காக இச்சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது:

கடந்த ஜனவரி மாதம் அரசியல் அமைப்பு மாற்றம் குறித்து ஜனாதிபதி தலைமையிலான நிறைவேற்றுக்குழு தமிழ்க்கட்சிகளுடன் இறுதியாகபேச்சுவார்த்தை நடத்த இருந்தது.

இதேவேளை அரசியல் அமைப்பு மாற்றம் குறித்து ஆராய நடத்தப்படவுள்ள கூட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி கலந்து கொள்ளாது என்று மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார். இப்போதைய சூழ் நிலையில் அரசியல் அமைப்பு சீர்திருத்தம் குறித்து எதுவித பயனும் இல்லை என்றும் இக் கூட்டத்தை ஒத்தி போடுமாறு கூட்டணி கோரிக்கை விடுத்துள்ளது. [வ]

## உயிரிழந்தோர் விபரம்

ஓயாத அலைகள் மூன்று நடவடிக்கையிலும் மற்றும் பல சம்பவங்களிலும் உயிரிழந்த தமது உறுப்பினர்களின் விபரங்களைப் புலிகள் வெளியிட்டுள்ளனர். அவர்களின் விபரம் வருமாறு.

★ சூரியன்/தேவன் (குணசேகரம் ஜீவானந்தம்) யாழ்ப்பாணம்.

★ அதிசுதன் (சின்னத்துரை சுரேந்திரதாஸ்) மட்டக்களப்பு

★ பெருஞ்சேரன்/சேரன் (நல்லையா முகுந்தன்) யாழ்ப்பாணம்

## கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

தேசியவீடமைப்பு அபிவிருந்திஅதிகாரசபையில்கடமையாற்றும் சகல ஊழியர்களையும் உடனடியாக கடமைக்கு சமூகமளிக்குமாறு மாவட்ட முகாமையாளர் கேட்டுள்ளார்.

### இந்திய...

ஹேகேம் நேற்று இந்தியா சென்று இலங்கை நிலைவரம் தொடர்பாக இந்திய வெளிவிவகார செயலாளர் லலித் மான்சிங்குடன் விரிவாக பேச்சு நடாத்தியுள்ளார்

இதற்கிடையில் அமெரிக்க அரசியல் விவகாரத்துறை இணை அமைச்சர் தாமஸ் பிக்கறிங்கும் இலங்கை விவகாரம் தொடர்பான ஆலோசனைக்கொ புதுடில்லி விரைந்துள்ளதும் இங்குகுறிப்பிடத்தக்கது. (வ.ச)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கனகராஜா மனோன்மணி

தாவடியை நிரந்தர வசிப்பிடமாகவும் தற்காலிகமாக இன்புருட்டி பருத்தித்துறை 34/1/எ யாழ் வீதி யாழ்ப்பாணம் ஆகிய இடத்தில் வசித்தவருமாகிய திருமதிகனகராஜாமனோன்மணி21-05-2000கொழும்பில்காலமானார் அன்னார் கனகராஜாவின் அன்பு மனைவியும் திரு. நாகலிங்கம், காலம் சென்ற திருமதி நாகம்மா அவர்களின்அன்பு மகளும்.ராசரத்தினம், கனகம்மா, தங்கம்மா ஆகியோரின் சகோதரியும், சின்னராசா, அருணகிரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் நித்தியானந்தன் (உதவிமுகாமையாளர் மக்கள் வங்கி பிரதான வீதி யாழ்ப்பாணம்) தயாசிலன்(நியூசிலாந்து)கேமலதா[நியூசிலாந்து] கேதீஸ்வரன், வசந்தராணி(3ம்வருடமுகாமைத்துவ பீடம்,யாழ். பல்கலைக்கழகம்)ஆகியோரின் சிறியதாயாரும் ரோகினி [ஆசிரியை வேம்படி மகளிர்கல்லூரி] சுகந்தி [நியூசிலாந்து ஆகியோரின் மாமியும் வாஹினி, நிகேதன், கீர்த்திகன், கிறாஷிகன், கேஷிகன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்: அன்னாரின்ஈமக்கிரியைகள் 22-05-2000அன்று கொழும்பில் நடைபெற்றது. இத்தகவலை உற்றார் உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்
சி. நித்தியானந்தன்
(பேரமகன்)

வன்னியசிங்கம்வீதி
தாவடிவடக்கு
தாவடி

(465)

### திருமதி நல்லம்மா பொன்னுச்சாமி

காலஞ்சென்ற பொன்னுச்சாமி (முன்னாள் மூளாய் வைத்தியசாலை ஊழியர்) அவர்களின்அன்பு மனைவி நல்லம்மா அவர்கள் (24-05-2000) அன்று காலமானார் அன்னார் தருமலிங்கம் (முன்னாள்இ. போ. ச. ஊழியர்)பொன்னம்பலம் பத்மாவதி(கனடா)முருகையா பரமேஸ்வரி நாகலிங்கம்(கிராமிய வைத்தியசாலை வட்டுக்கோட்டை) அப்புத்துரை கண்ணகையம்மா மகாதேவன் யோகம்மா (மலேசியா) தெட்சணா மூர்த்தி—சரஸ்வதி, பாஸ்கரன்-நவமலர்(சுவிஸ்) ஆகியோரின் அன்புத்தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 25.5.2000 முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று திருவடிநிலைமயானத்தில்தகனக்கிரியைக்காகஎடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலைஉற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
பொ, நாகலிங்கம்
(மகன்)

பண்ணாகம்
சுழிபுரம்

(சி/340)

## மரண அறிவித்தலும் நன்றி நவிலலும்

### திருமதி கதிரவேலு கமலாம்பிகை

கரம்பன் கிழக்கை பிறப்பிடமாகவும், சித்தங்கேணியில் வசித்தவருமாகிய காலஞ் சென்ற சி கதிரவேலுவின் (மதுவரி இலாகா ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்)
அன்பு மனைவியார்

திருமதி கதிரவேலு கமலாம்பிகை
19-05-2000 அன்று வெள்ளிக்கிழமை காலமாகிய செய்தியை அறிவிக்க முடியாமைக்கு மனம் வருந்துகின்றோம்,

அன்னாரின் இல்லத்தில் நடைபெற்ற ஈமக் கிரியைகளில் பங்கு பற்றிய உற்றார், உறவினர், நண்பர்கள் ஆகியோருக்கு எமது நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

தகவல்

மூத்தமகள் - து. புனிதவதி
நாகபூஷணி அம்மன் ஆலயம் கந்தரோடை

மகன் க. சிவபாலன்
(பேராசிரியர் அண்ணாமலை பல்கலைக் கழகம்-சிதம்பரம்)

மகள் - சிவயோகராணி
(ஆசிரியை உடுவில் மகளிர் கல்லூரி)

மகன் - க. உமாபாலன்
(ஆசிரியர்)

பேரப்பிள்ளைகள் - து. சிவசித்தன்
து, சிவறஞ்சனி

பாடசாலை ஒழுங்கை
''கநேச பதி''
சித்தங்கேணி
24-05-2000

[சி 342]

இப்பத்திரிகை ''வலம்புரி'' அச்சோ ஸ்தாபனத்தாரால் இல. 15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000ஆம் ஆண்டு மேமாதம் 25-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.